# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1998 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, இறப்புகள் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்

---

*(1998, திசெம்பர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

1998, திசெம்பர் மாதம் 18 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 7.75** **தபாற் செலவு : ரூபா 3.50**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1998 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, இறப்புக்கள் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.– ஓ. 14/98
4456

## காணாமற்போயுள்ளவர்களென அறிக்கையிடப்பட்ட ஆட்களின் இறப்புக்கள் பற்றிப் பதிவுசெய்வதற்கும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான தொரு சட்டம்

இலங்கையில் பயங்கரவாத அத்துடன் நாசகாரச் செயற்பாடுகள் காரணமாக இடம்பெற்ற உண்ணாட்டுக் குழப்பத்தின் போது பல ஆட்கள் இறந்துள்ளார்கள் ஆதலாலும், (110 ஆம் அத்தியாயமான) பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய இறப்புக்கள் பதியப்படுவதனைத் தடைசெய்கின்ற குறித்த சில செயன்முறை இடர்பாடுகள் இருக்கின்றனவாதலாலும் ;

அத்துடன், அத்தகைய இறப்புக்களைப் பதிவுசெய்வதனை இயலச்செய்வதற்கு ஏற்பாடுசெய்வது அவசியமாக வந்துள்ளதாதலாலும் ;

ஆகவே, இப்போது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும் இச்சட்டத்தின் கால நீட்சியும்.

**1.** இச்சட்டம், 1998 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, இறப்புக்கள் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அது ஆரம்பித்ததிலிருந்து இரண்டாண்டு காலப்பகுதியொன்றுக்கு நடைமுறையிலிருத்தலும் வேண்டும்.

இறப்புச் சான்றிதழுக்கு யார் விண்ணப்பிக்கலாம் என்பது.

**2.** எவரேனும் ஆளைக் காணவில்லை என அறிக்கையிடப்பட்டும் அவர் உயிரோடு இருந்தால், அவரைப்பற்றி எப்படியும் கேள்விப்பட்டிருக்கக்கூடிய ஒருவர், தாம் ஓராண்டுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு அவர் பற்றிக் கேள்விப்படவில்லை என்பதால் அவர் இறந்திருக்கக்கூடும் எனத் தாம் கருதுவதாகவும் இருக்குமிடத்து, அத்தகைய ஆளொருவரின் நெருங்கிய உறவினரொருவர் அத்தகைய ஆள் இறந்திருக்கலாமென உண்மையாகவே நம்பினால் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவிதத்தில் (110 அத்தியாயமான) பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் அத்தகைய ஆளின் இறப்பைப் பதிவு செய்யும்படியும் அத்தகைய ஆள் தொடர்பிலான இறப்புச் சான்றிதழொன்றை அவருக்கு வழங்கும்படியும் விண்ணப்பிக்கலாம்.

2-டீ - 049879 - 1,100 (98/09)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணப்பிப்பதற்கான நடவடிக்கை முறை.

**3**. ஆளொருவரின் இறப்பைப் பதிவுசெய்வதற்கான இச் சட்டத்தின்கீழான விண்ணப்பம் ஒவ்வொன்றும், ஒன்றில் பதிவாளர் தலைமையதிபதிக்கு அன்றேல் எந்த மாவட்டத்தில் அத்தகைய ஆள் கடைசியாக வசித்தாரோ அந்த மாவட்டத்தின் பிறப்புக்கள், இறப்புக்கள் மாவட்டப் பதிவாளருக்குச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்திற்கான அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள படிவத்தில் இருத்தலும் வேண்டும்.

வழங்கப்படவேண்டிய மேலதிக விபரங்கள்.

**4**. இச்சட்டத்தின்கீழான விண்ணப்பம் ஒவ்வொன்றும் எந்த ஆளின் இறப்பானது பதிவுசெய்யப்படவேண்டுமென அவர் நாடினாரோ அந்த ஆள் இறந்துவிட்டார் என நம்புவதற்கான ஏதுக்களை எடுத்துக்காட்டும் விண்ணப்பதாரரின் ஒரு சத்தியக்கடதாசியுடன் சேர்த்து எந்தக் கிராம அலுவலர் பிரிவில் எந்த ஆளுடைய இறப்பு பதிவுசெய்வதற்கு நாடப்பட்டதோ அந்த ஆள் கடைசியாக அந்தப் பிரிவில் வதிந்துள்ளார் என்பதைக் குறிப்பிடுவதும், ஓராண்டுக்கு மேலானவொரு காலப்பகுதிக்கு அவரை உயிருடன் காணவில்லை அல்லது அவர் பற்றிக் கேள்விப்படவில்லை என்பவற்றை உறுதிப்படுத்துகின்றதுமான கிராம அலுவலரின் அறிக்கையொன்றும், அத்தகைய விண்ணப்பத்திற்கு ஆதாரமான வேறேதேனும் சான்றும் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

விண்ணப்பத்தை வெளிக்காட்டி வைத்தல்.

**5**. இச்சட்டத்தின்கீழான விண்ணப்பமொன்றைப் பெற்றுக் கொண்டதன்மேல் விடயத்திற்கேற்ப பதிவாளர் தலைமையதிபதி அல்லது மாவட்டப் பதிவாளர், தமது அலுவலகத்திலும் எந்த ஆளின் இறப்பு பதிவுசெய்யப்பட நாடப்படுகின்றதோ அந்த ஆள் கடைசியாக வசித்த அல்லது தமது நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருந்த பிரிவின் கிராம அலுவலர் அலுவலகங்களிலும் அறிவித்தல் பலகையில் இரண்டு வார காலப்பகுதியொன்றுக்கு அத்தகைய விண்ணப்பத்தின் பிரதியொன்றை வெளிக்காட்டி வைக்கச் செய்வித்தல் வேண்டும்.

பதிவுசெய்வதற்கான ஆட்சேபனைகள்.

**6**. எந்தத் தேதியன்று இச்சட்டத்தின்கீழான விண்ணப்பத்தின் பிரதியொன்று 5 ஆம் பிரிவின்கீழ் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு முதலில் வெளிக்காட்டி வைக்கப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள்ளாக, எவரேனும் ஆள், அத்தகைய விண்ணப்பம் தொடர்புறுத்தும் ஆளின் பதிவுபற்றிய எழுத்திலான அவரது ஆட்சேபனைகளை விடயத்திற்கேற்ப பதிவாளர் தலைமையதிபதிக்கு அல்லது மாவட்டப் பதிவாளருக்கு அனுப்பி வைக்கலாம் ; அத்துடன் அத்தகைய ஆட்சேபனைகள் அவற்றிற்கான ஏதுக்களை எடுத்துக்காட்டுகின்றதான ஆட்சேபிப்பவரினதும் வேறேதேனும் ஆளினதும் சத்தியக்கடதாசியொன்றினால் ஆதாரப்படுத்தப்படுதலும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறப்பைப் பதிவுசெய்தல்.

7. (1) விண்ணப்பத்துக்கான ஆட்சேபனைகளை அனுப்புவதற்கென அனுமதிக்கப்பட்ட ஒருமாத காலப்பகுதி முடிவடைந்ததன்மேல், விடயத்திற்கேற்ப பதிவாளர் தலைமையதிபதி அல்லது மாவட்டப் பதிவாளர், விண்ணப்பத்தினதும் ஆட்சேபனைகள் எவையுமிருப்பின் அவற்றினதும் ஆதாரமாகவுள்ள சான்றுகளுடன் சேர்த்து விண்ணப்பத்தைப் பரிசீலித்தல் வேண்டும் என்பதுடன் அவர் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணையின் பின்பு விண்ணப்பத்தில் கூறப்பட்ட விடயங்களின் உண்மைபற்றித் திருப்திப்பட்டால், அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் வேண்டும். அத்துடன், மேற்சொல்லப்பட்டவாறாக அத்தகைய விசாரணைக்குப்பின் அவர் நிச்சயப்படுத்தக்கூடியவாறான (110 ஆம் அத்தியாயமான) பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டனவான அத்தகைய இறப்புப்பற்றிய விபரங்களை எடுத்துக்காட்டித் தமது கைப்பட ஒரு சான்றிதழை பதிவாளர் தலைமையதிபதிக்கு அனுப்பி வைத்தலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சான்றிதழைப் பெற்றுக்கொண்டதன் மேல் தோதான பதிவாளரை பதிவாளர் தலைமையதிபதி 8 ஆம் பிரிவினால் அவருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில் சான்றிதழொன்றை நீக்கஞ்செய்கின்ற விடயத்தில் தவிர, (110 அத்தியாயமான) பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச்சட்டத்தின்கீழ் அத்தகைய பதிவாளரால் பேணப்படும் இறப்புக்கள் பதிவுச்சட்டத்தின்கீழ் அத்தகைய பதிவாளரால் பேணப்படும் இறப்புக்கள் இடாப்பில் அத்தகைய சான்றிதழில் குறித்துரைக்கப்படும் விபரங்களைப் பதியும்படி பணிக்கும் கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

(3) (110 அத்தியாயமான) பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவாளரால் பேணப்படும் இறப்புக்கள் இடாப்பில் ஓர் இறப்புத் தொடர்பிலான விபரங்களைப் பதியும்படி பணிக்கின்றதான (2) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று பதிவாளரால் பெற்றுக் கொள்ளப்பட்டதன் மேல் பதிவாளரானவர், உடனடியாக அவ்விபரங்களை அத்தகைய இடாப்பில் பதிதல் வேண்டுமென்பதுடன் தோதான இடத்தில் ஒப்பமிடுதலும் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழான எழுத்திலான கட்டளை ஒவ்வொன்றும், பதிவின் இயைபான பதிவீட்டின் இணைப் பிரதியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அவரது அலுவலகத்தில் கட்டுக்காப்பாக வைத்திருப்பதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவாளர் தலைமையதிபதிக்கு அனுப்பிவைக்கும்பொருட்டு தோதான மாவட்டப் பதிவாளருக்கு இணைப்பிரதியையும் சேர்த்து அனுப்பி வைக்கப்படுதலும் வேண்டும்.

சான்றிதழை வழங்க மறுப்பதற்கெதிரான அல்லது சான்றிதழை வழங்குவதற்கெதிரான மேன்முறையீடு.

8. ஏழாம் பிரிவின்கீழ் அவருக்குச் சான்றிதழொன்றை வழங்க மறுக்கின்ற மாவட்டப் பதிவாளரின் முடிவினால் அதிருப்தியடைந்துள்ள விண்ணப்பகாரர் ஒருவர் அல்லது இச்சட்டத்தின் கீழ் சான்றிதழ் ஒன்றை வழங்குவதற்கெதிராக 6 ஆம் பிரிவின்கீழ் ஆட்சேபித்துள்ளவரும் அத்தகைய சான்றிதழை வழங்குவதற்கு மாவட்டப் பதிவாளர் செய்த முடிவினால் அதிருப்தியடைந்துள்ளவருமான ஆள் ஒருவர், விடயத்துக்கேற்றாற்போல அத்தகைய மறுப்பு அல்லது வழங்குகை பற்றிய அறிவிப்பின்மேல் ஒரு மாதத்துக்குள்ளாக, விடயத்திற்கேற்றாற்போல் அத்தகைய மறுப்புக்கு அல்லது வழங்குகைக்கு எதிராக பதிவாளர் தலைமையதிபதிக்கு மேன்முறையீடு செய்யலாம். பதிவாளர் தலைமையதிபதி தம்முன்னருள்ள விடயங்களை மீளாய்வு செய்தபின்னர், விடயத்துக்கேற்றாற்போல மாவட்டப் பதிவாளரின் முடிவை உறுதிப்படுத்தலாம் அல்லது 7 ஆம் பிரிவின்கீழ் சான்றிதழொன்றை வழங்குமாறு மாவட்டப் பதிவாளரைப் பணிக்கலாம் அல்லது 7 ஆம் பிரிவின்கீழ் அம்மாவட்டப் பதிவாளரால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை நீக்கஞ்செய்யலாம்.

எந்த ஆட்கள் தொடர்பில் விசாரணை ஆணைக்குழுவொன்றினால் அல்லது விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றினால் விவரக் கண்டுபிடிப்புகள் இருக்கின்றனவோ அந்த ஆட்களின் இறப்புகளின் பதிவு தொடர்பிலான விசேட நடவடிக்கை முறை.

9. (1) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவொன்று அல்லது 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, விசேட சனாதிபதி ஆணைக்குழுக்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட விசேட சனாதிபதி ஆணைக்குழுவொன்று ஆளொருவர் மறைந்துபோயுள்ளார் அல்லது காணாமற்போயுள்ளார் எனக் கண்டுள்ளவிடத்து, அவ்வாளின் கிட்டிய உறவினர், ஒன்றில் பதிவாளர் தலைமையதிபதிக்கு அன்றேல் அவ்வாள் கடைசியாக வசித்த மாவட்டத்தின் மாவட்டப் பிறப்புகள், இறப்புகள் பதிவாளருக்கு, அவ்வாளின் அத்துடன் இறப்பை (110 ஆம் அத்தியாயமான) பிறப்புகள், இறப்புகள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யுமாறும் அத்துடன் அவ்வாள் தொடர்பில் இறப்புச் சான்றிதழொன்றைத் தமக்கு வழங்குமாறும் இச்சட்டத்திற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் விண்ணப்பிக்கலாம் ; அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றுடனும் 4 ஆம் பிரிவின் நியதிகளின்படி விண்ணப்பதாரரின் சத்தியக்கடதாசியொன்றும் அவ்வாள் தொடர்பில் விடயத்திற்கேற்ப விசாரணை ஆணைக்குழு அல்லது விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு கண்டறிந்த விபரத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்றும் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) மாவட்டப் பதிவாளர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதன்மீது இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும் விண்ணப்பத்திலும், சேர்த்தனுப்பப்பட்ட சத்தியக்கடதாசியிலும் கண்டறிந்த விடயத்திலுமிருந்து அவரால் ஆய்ந்தறிந்த இயலுமாயிருந்தவாறு (110 ஆம் அத்தியாயமான) பிறப்புகள், இறப்புகள் பதிவுச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட இறப்பின் அத்தகைய விவரங்களைத் தந்து அவரது கைப்பட சான்றிதழொன்றைப் பதிவாளர் தலைமையதிபதிக்கு உடனடியாக அனுப்புதல் வேண்டும்.

(3) பதிவாளர் தலைமையதிபதி (2) ஆம் உட்பிரிவின்கீழ் சான்றிதழொன்று கிடைக்கப்பெற்றதன்மீது அத்தகைய சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட விவரங்களை (110 ஆம் அத்தியாயமான) பிறப்புகள், இறப்புகள் பதிவுச்சட்டத்தின்கீழ் தோதான பதிவாளரால் பேணப்படும் இறப்புகள் பதிவேட்டில் பதியுமாறு அத்தகைய பதிவாளரைப் பணிக்கும் கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

(4) பதிவாளர், (110 ஆம் அத்தியாயமான) பிறப்புகள், இறப்புகள் பதிவுச்சட்டத்தின்கீழ் அவரால் பேணப்படும் இறப்புகள் பதிவேட்டில் இறப்பொன்று தொடர்பிலான விவரங்களைப் பதியுமாறு பணிக்கும் (3) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று கிடைக்கப்பெற்றதன்மீது உடனடியாக அத்தகைய விவரங்களை அத்தகைய பதிவேட்டில் பதிதல் வேண்டும் என்பதுடன் தோதான இடத்தில் கையொப்பமிடுதலும் வேண்டும்.

(5) மூன்றாம் உட்பிரிவின்கீழான கட்டளை ஒவ்வொன்றும் இயைபான பதிவேட்டுப் பதிவின் இணைப்பிரதியுடன் இணைக்கப்பட்டு இணைப்பிரதியுடன் சேர்த்துப் பதிவாளர் தலைமையதிபதிக்கு அவரது அலுவலகத்தில் கட்டுக்காப்பிற்காக அனுப்பிவைக்கப்படுவதற்கெனப் பதிவாளரால் தோதான மாவட்டப்பதிவாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(6) ஒராம் உட்பிரிவின்கீழ் பதிவாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பம் செய்யப்படுமிடத்து, (2) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் அப்பிரிவுகளில் மாவட்டப் பதிவாளரைப் பற்றிய குறிப்பீடானது, பதிவாளர் தலைமையதிபதியைப் பற்றிய குறிப்பீடொன்று என்றாற்போன்று ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

**10.** (1) இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றைப் பின்பற்றி, ஏதேனும் இறப்பு பதியப்பட்டிருந்து, அதன் பின்னர் எவரேனும் ஆள் எந்த நேரத்திலும் அவ்வாறு இறந்துள்ளதாகப் பதிவுசெய்யப்பட்டவரான ஆள் உயிருடன் உள்ளார் என அறியவரின், உடனடியாக, அத்தகைய தகவலை அவர் பதிவாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

இறந்துவிட்டதாகப் பதிவுசெய்யப்பட்டவரான ஆள் உயிருடன் இருப்பதாகக் காணப்படுமிடத்திலான நடவடிக்கை முறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) பதிவாளர் தலைமையதிபதியானவர், அத்தகைய தகவலைப் பெற்றுக் கொண்டதன்மேல், இயைபான பொலிசு நிலையத்தின் பொறுப்பான அலுவலருக்குத் தகவலைத் தெரியச் செய்தல் வேண்டும் ; அவர் அத்தகைய தகவலின் உண்மை பற்றி விசாரித்து, எந்தத் திகதியன்று, அத்தகைய அலுவலருக்கு அத்தகைய தகவல் தெரியச் செய்யப்பட்டதோ அந்தத் திகதியிலிருந்து நான்கு வாரங்களுக்குள்ளாகப் பதிவாளர் தலைமையதிபதிக்கு அறிக்கையிடுதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டதன்மேலும், அவர் அவசியமெனக் கருதுகின்ற வாறான அத்தகைய விசாரணையின் பின்னரும், பதிவாளர் தலைமையதிபதி எந்த ஆளுடைய இறப்பு பதிவுசெய்யப் பட்டுள்ளதோ, அந்த ஆள் உயிருடன் இருக்கின்றார் என்பது பற்றித் திருப்திப்பட்டால் (110 ஆம் அத்தியாயமான) பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச்சட்டத்தின் 52 ஆம் பிரிவின்கீழ் விடயத்தின் சூழ்நிலைகளில் தோதாகக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கையை எடுத்தல் வேண்டும் அல்லது கட்டளையை ஆக்குதல் வேண்டும் அல்லது அத்தகைய பணிப்பைக் கொடுத்தல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின்கீழ் பதிவாளர் தலைமையதிபதியால் நடாத்தப்படும் விசாரணை எதுவும் அதனது தொடக்கத்தி லிருந்து ஒரு மாதத்திற்குள்ளாக முடிக்கப்படுதல் வேண்டு மென்பதுடன், பணிப்பாளர் தலைமையதிபதியானவர், இச்சட்டத்தின்கீழான விசாரணையொன்றின் நோக்கங்களுக்காக அந்தச் சட்டத்தின்கீழ் அவரால் நடாத்தப்படும் விசாரணை யொன்று தொடர்பில், (110 ஆம் அத்தியாயமான) பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச்சட்டத்தின்கீழ் அவரால் பிரயோகிக்கப் படற்பாலனவான எல்லாத் தத்துவங்களையும் பிரயோகித்தலும் வேண்டும்.

தவறு.

**11.** எந்த ஆள் –

(அ) இச்சட்டத்தின்கீழ் அவரால் செய்யப்பட்ட விண்ணப்ப மொன்றில் அறிந்துகொண்டே பொய்யான கூற் றொன்றைச் செய்கின்றாரோ அல்லது இச்சட்டத் தின்கீழ் பொய்யான தகவலைக் கொடுத்து தவுகின்றாரோ ; அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) எந்த ஆளின் இறப்பு இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பத்தைப் பின்பற்றிப் பதிவுசெய்யப் பட்டதோ அந்த ஆள் உயிருடன் உள்ளார் என்பதைத் தெரிந்துள்ளவராக இருந்துகொண்டு பதிவாளர் தலைமையதிபதிக்கு அத்தகைய தகவலைக் கொடுத்துதவத் தவறுகின்றாரோ ; அல்லது

(இ) அத்தகைய சான்றிதழில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள் உயிருடன் உள்ளார் எனத் தெரிந்துகொண்டு அல்லது அவ்வாறு நம்புவதற்கான காரணத்தைக் கொண்டிருந்தும், பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட இறப்புச் சான்றிதழொன்றை நேர்மையற்றவிதமாக அல்லது மோசடியாகப் பயன்படுத்துகின்றாரோ,

அந்த ஆளெவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் மேல்நீதிமன்றத்தி னாலான விளக்கத்தின்பின் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் மூன்றாண்டுகளுக்குக் குறையாததும் ஐந்தாண்டுகளை விஞ்சாதது மானவொரு காலத்திற்குத் தண்டனைத் தீர்ப்பளிக்கப்படுதலும் வேண்டும்.

**12.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**13.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி –

பொருள் கோடல்.

"தோதான மாவட்டப் பதிவாளர்", "தோதான பதிவாளர்" அத்துடன் "மாவட்டம்" என்பன (110 ஆம் அத்தியாய மான) பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச்சட்டத்தினால் அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்ட கருத்துக்களைக் கொண்டனவாகும் ;

"மாவட்டப் பதிவாளர்" என்பது (110 ஆம் அத்தியாயமான) பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டவரான பிறப்புக்கள், இறப்புக்கள் மாவட்டப் பதிவாளர் எனப் பொருள்படும் ;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பதிவாளர் தலைமையதிபதி" என்பது (110 ஆம் அத்தியாயமான) பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவாளர் தலைமையதிபதி என்று பொருள்படும் என்பதுடன் பிரதிப் பதிவாளர் தலைமையதிபதியையும் உள்ளடக்கும்.

## அட்டவணை

(பிரிவு 3உம் 9உம்)

### காணாமற்போனவரான ஆளொருவரின் இறப்பைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பம்

1. காணாமற்போன ஆளின் முழுப்பெயர் :—................................
2. பாலும் இனமும் :—................................
3. வயது :—................................
4. இறந்த திகதி :—................................
5. உமக்குத் தெரிந்த கடைசி வதிவிட முகவரி :—................................
6. நிரந்தர வதிவிட முகவரி :—................................
7. பதவி அல்லது தொழில் :—................................
8. விண்ணப்பகாரரின் முழுப்பெயரும் வதிவிடமும் :—..................
9. காணாமற்போன ஆளுக்கும் விண்ணப்பகாரருக்குமுள்ள உறவு :—.........

................................என்னும் முகவரியைச் சேர்ந்த........................ ஆகிய நான், சொல்லப்பட்ட................................................ (காணாமற்போன ஆளின் பெயர்) ஓராண்டுக்கு மேலாகக் காணப்படாதுள்ளார் எனவும், சொல்லப்பட்ட ........................ என்பவர் இறந்துவிட்டார் என நிச்சயமாக நம்புகிறேன் எனவும் இத்தால் நான் கூறுகின்றேன்.

ஆகவே, இறப்பானது பிறப்புக்கள், இறப்புக்கள் பதிவுச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட வேண்டுமென நான் வேண்டுகின்றேன்.

..................................

விண்ணப்பகாரரின் கையொப்பம்

திகதி :—......................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org